DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**S.T.C.No.495/2018**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | DW2 | Caste | : | |
| Name | : | மாணிக்கம் | Age | : | 54 |
| F/N | : | செங்கமலை | Occupation | : | கொத்தனார் |
| Village | : | இராமேஸ்வரம் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 19th day of March 2024

**19.03.2024**

**(புகார்தாரர் மற்றும் எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரத்தில் குடியிருந்து கொண்டு கொத்தனார் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் எதிரியை எனக்கு தெரியும். எனது தரப்பு சாட்சியத்தை பிரமாண பத்திரம் மூலம் தாக்கல் செய்கிறேன். பிரமாண பத்திரத்தில் உள்ள விபரங்கள் அனைத்து எனக்கு நன்கு தெரியும். அதை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். பிரமாண பத்திரத்தை வழக்கறிஞர் தயார் செய்தார். பிரமாண பத்திரத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். நம்புராஜன் கேட்டு கொண்டதிற்கிணங்க அவருக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் இலங்கை அகதி என்றால் சரியல்ல. நான் தற்போது ஊட்டியில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய ஆதார் அட்டையில் ஊட்டி விலாசம் உள்ளது என்றால் சரியல்ல. நான் கட்டிட வேலை பார்ப்பதற்கு எந்த ஆவணமும் என்னிடம் இல்லை என்றால் சரிதான். என்னுடைய தாயாரின் பெயர் கமலா என்றால் சரிதான். அவர் சென்னையில் இறந்துவிட்டார். நான் கையெழுத்திட்ட ஆவணத்தை யார் தயார் செய்தது என்றால் வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் நான் கையெழுத்து மட்டும் தான் போட்டேன் என்றால் சரிதான். அதில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கொத்தனார் வேலை பார்க்கவில்லை என்றாலும், நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொன்ன விபரங்கள் அனைத்தும் பொய் என்றாலும் சரியல்ல. கடந்த 01.05.2018 ம் தேதி நான் இராமேஸ்வரத்தில் தான் இருந்தேன். கடந்த 2018 ம் ஆண்டு எதிரிக்கும், புகார்தாரருக்கும் இடையே இருந்த கொடுக்கல் வாங்கல் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை** : இல்லை

**(ஒப்பம்/–க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**